DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 4

| | |
|---|---|
| Name | : வாழாதி பாண்டி |
| Father's Name | : சண்முக சுந்தரம் |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 15th day of July, 2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, சேமாத்தம்மன் நகர், 3 வது செக்டார், கோயம்பேடு, சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ன் வீட்டில் நான் ஒரு வாடகைதாரராக 2 வது தளத்தில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் நான் குடியிருக்கும் Portion க்கு அடுத்த Portion ல் குடியிருக்கிறார். 28.04.2024 அன்று மதியம் 2 மணியளவில் நான் எனது அறையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தேன், அப்போது நான் தங்கியிருக்கும் அறைக்கும் மேலே வேயப்பட்டுள்ள தகர சீட்டில் யாரோ நடந்து போகும் சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்த போது

எங்கள் வீட்டு உரிமையாளர் மனைவி பொன்மாலா வராண்டாவில் இருந்தார். என்ன என்று கேட்ட போது, அவரது கணவர் மேலே ஏறிவிட்டதாகவும், என்னை ஏறி பார்க்க சொன்னார், நான் சீட் மேல் ஏறி பார்த்தபோது அங்கு யாரும் இல்லை. நான் இடதுபுறம் சென்று பார்த்தபோது, பின்புறம் உள்ள பக்கத்து மாடியில் எனது வீட்டு உரிமையாளர் மைக்கேல் துரைபாண்டி மல்லாந்த நிலையில் விழுந்து கிடந்தார். பின் மண்டையில் அடிபட்டு ரத்தம் வந்திருந்தது. நான் வெளியே வந்தபோது ஆஜர் எதிரி கீழே இறங்கி ஓடினார். இறந்து போனவருக்கு பின்னாடியே அவரது மகனும் சென்றிருந்தார், நான் ஏறி பார்த்த போது அவரும் அங்கிருந்தார். பின்னர், பக்கத்து வீட்டுக்காரரும் மற்றவர்களும் இறந்து போன நபரை கீழே தூக்கி வந்தார்கள். ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு சென்றார்கள். அன்றே இறந்து விட்டதாக கேள்விபட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரி தரப்பில் ஆஜரான இளம் வழக்கறிஞர் தனது மூத்த வழக்கறிஞர் மதுரையில் இருப்பதால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரினார். இவ்வழக்கு விசாரணையானது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டு இன்று பட்டியலிடப்பட்டது. எதிரி தரப்பில்

சாட்சியின் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லாததால் கு.வி.மு.ச.பிரிவு 309, IV வது Proviso clause (c) ன்படி (Dispense with) செய்யப்படுகிறது.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |